**செய்தி வெளியீடு எண் : 162** **நாள் : 24.01.2023**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி**

முரசொலி துணை ஆசிரியர் திரு. முராஜா அவர்கள் இறந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன். திரு. ராஜா அவர்கள் இதழியலில் நீண்ட அனுபவமும், முரசொலியில் 25 ஆண்டுகளுக்கும் மேலாகப் பிழை திருத்துநர் - செய்தியாளர் - துணைச் செய்தி ஆசிரியர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்து, திறம்பட பணியாற்றி தலைவர் கலைஞர் அவர்களின் அன்பைப் பெற்றவர்.

சென்ற ஆண்டு கொரோனா தொற்றால் அவர் பாதிக்கப்பட்டபோது, அவரது மருத்துவ சிகிச்சைக்குத் தேவையான உதவிகளைச் செய்து கொடுத்தேன். கொரோனா பெருந்தொற்றில் இருந்து மீண்டு வந்த அவர், எனக்கு நன்றி தெரிவித்தபோது அவரது முகத்தில் பூத்த மகிழ்ச்சி, இன்றும் என் கண்களுக்குள்ளேயே இருக்கிறது. நான் முரசொலி அலுவலகத்துக்குச் செல்லும் ஒவ்வொரு முறையும், அன்பொழுக வரவேற்கும் அவரது புன்சிரிப்பை இனி காண முடியாது என்றெண்ணி கண் கலங்குகிறேன்.

நலமுடன் பணியாற்றி வந்த அவர், பொங்கல் நாளன்று எதிர்பாராத விதமாக விபத்துக்குள்ளாகி, குரோம்பேட்டையில் உள்ள தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார். இந்தத் தகவலை அறிந்ததும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்களையும், சட்டமன்ற உறுப்பினர் திரு. இ.கருணாநிதி அவர்களையும் தொடர்புகொண்டு, அவருக்கு உரிய சிகிச்சை அளித்திட அறிவுறுத்தியிருந்தேன்.

அந்த விபத்திலிருந்து அவர் மீண்டு வந்துவிடுவார் என்று நம்பிக்கையோடு நானும் - முரசொலி ஊழியர்களும் காத்திருந்த நிலையில், அவர் மறைந்துவிட்டார் என்ற செய்தி இடியென இன்று மாலை வந்தது. என்னை நானே தேற்றிக் கொண்டு, அவரது மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலையும், இந்த வேதனை மிகுந்த செய்தியால் தவிக்கும் முரசொலி ஊழியர்களுக்கும் -
திரு. ராஜா அவர்தம் குடும்பத்தார்க்கும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

..........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in